ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தமிழக நுண்கலைகள் கூறும் ஆரம்பகால நாடக கலை பாணி - ஓர் ஆய்வு

**முனைவர் கி.ஆ பாபு**

**பேராசிரியர் மற்றும் தலைவர், கலை வரலாற்றுத் துறை**

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.**

13

**ஆய்வுச்சுருக்கம்**

பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு நீரால் சூழப்பட்ட இவ்வுலகம் காலமாற்றத்தால் உரைபணியாகி பின்பு உருகி கரைந்தோடி சிறு சிறு நிலப்பகுதிகளாக மாறியும் உருகிய நீர் ஓடைகளாக, ஆறுகளாக மாற்றம் கொண்டு அந்நீரிலும் நிலத்திலும் பல்லுயிர்கள் தோன்றி அதில் மனித இனம் உருவாகி அப்பல்லுயிர்களிடத்திலிருந்து வேறுபட்டிருந்தது. அப்படி உருவாகிய மனித இனம் தான் பரிணாமித்த ஆரம்ப காலத்தில் தனியாகவும், குடும்பமாகவும் பின்பு குழுவாகவும் மலைகளிலும், காடுகளிலும், ஆற்றங்கரை ஓரங்களிலும் வாழத் தொடங்கியது. அவ்வாறாக கண்டங்கள் பிரிந்து நிலங்கள் உருவாகி அதில் தமிழினம் தோன்றி பிற நிலமக்கிளிடமிருந்து நாகரீகமுற்று, கலைகளிலும், கலாச்சாரத்தில் மேன்மையுற்று, உலக வரலாற்றினை பதிவு செய்வதற்கு முன்பே இந்திய துணை கண்டத்தில் பரவி இருந்தது. அத்தமிழின ஆரம்ப கால நாடககலை பாணியினை நுண்கலைகள் மூலமாக எடுத்தியம்புவராக இக்கட்டுரை அமைக்கபட்டுள்ளது.

**முன்னுரை**

ஆதிமனிதன் தன் எண்ணங்களையும் உணர்வுகளையும் முதலில் ஒலியாகவும், சைகையாகவும் பின்பு உருவக் குறியீடாகவும் வெளிக்காட்டினான். அவையே முறையாக இசை நடனம், நாடகம் மற்றும் ஓவியக்கலைகளாக காலப்போக்கில் பரிணமித்தது. இவ்வாறான மனிதன் எண்ண உணர்வுகளை கலைப்பதிவுகளாக இசைப்பாடல்களிலும், நாட்டிய, நாடக வடிவத்திலும் ஓவியங்களாகம் சிற்பங்களாகவும் இன்றளவும் காண்கிறோம்.

தமிழ் இலக்கியங்களில் சங்காலம் தொட்டு தற்கால வரையிலான இலக்கண இலக்கிய நூல்களில் இசை, ஓவியம், சிற்பம், நடனம் நாடகம் என்று பல்வேறு கலைவடிவங்களின் குறிப்புகள் எண்ணிலயங்காமல் உள்ளது. “ஆதி காலத்தில்தமிழ்கலை குழந்தையாய் தவழ்ந்து, சங்ககாலத்தில் பருவம் பூத்துப் பொலிந்தனள், இசைக் குரலால், திசை அளந்தனள், ஆடற்கென்று அமைந்த அடியால், முத்திரையால், மெய்ப்பாட்டால் அரிய கருவூவந் திறந்தனள், சிற்ப ஓவிய முகங்காட்டிச் சிந்தனை விருந்து படைத்தனள்” என்று ஆன்றோர்கள் தமிழ்கலைகளைப்பற்றி பெருமை பேசியுள்ளனார்”(1) இவ்வாறான தமிழ் கலைகளின் பதிவுகள் முதலில் மலைக்குகைகளில் கோட்டோவியங்களாகவும் (Line Drawings) (ஓவியங்களாகவும்) பாறைகளின் கீரல் வடிவங்களாகவும் (Engravings - Petro glyphs) காணலாம்.

**தமிழக பாறை ஓவியங்காட்டும் நாடகப்பரிமானம்**

தமிழகத்தில் மட்டும் இதுவரை பாறை ஓவியம் மற்றும் கீரல் வடிவங்கள் சார்ந்த இடங்கள் முப்பதிற்கும் மேற்பட்டும் உள்ளன. நாடோடி வாழ்க்கை முறையில் வாழ்ந்த ஆதி மனிதன் தான் பார்த்ததையும், தன் அனுபங்களையும் இயற்கையினையும் குகைகளிலும், பாறைகளிலும்

வரிவடிவமாகவும் ஓவியமாகவும் பதிவு செய்தான். அவ்வாறு பதிவு செய்த நிகழ்வுகளை தான் சார்ந்தவர்க்கு ஒலியீடு முறையிலும், சைகை முறையிலும் அவ்வோவியங்களில் உள்ளவற்றை வெளிப்படுத்தினான். இவ்வாறான ஆதி மனிதனின் பாறை ஓவியங்கள் விழும்புரம் மாவட்டத்தில் கீழ்வாளை, ஆலாம்பாடி , மல்லப்பாடி, கொல்லூர் போன்ற இடங்களிலும், கிருஷ்ணகிரி மற்றும் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் மயிலாடும்பாறை தாளப்பள்ளி, கோணவகோறை போ என்ற இடங்களிலும் நீலகிரி மாவட்டங்களில் சீகூர், வெள்ளேரிகோம்பை போன்ற இடங்களிலும், திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களிலும் பெருவாரியாக காணப்படுகின்றன.(2)

அடர்சிவப்பு நிறத்தாறும் பழுப்பு நிறத்தாலும் பார்வைபடும் அவ்வோவியங்களில் உள்ள காட்சிகள் பெரும்பாறும் மனிதன் மிருகங்களை வேட்டையாடும் நிகழ்வுகளும், மக்கள் கூடி நடனமாடுவது போன்ற பதிவுகளும் பல இடங்களில் காணலாம். இவை அனைத்தும் பார்வையாளனுக்கு ஒரு திரை நாடக வடிமாகவே புலப்படும். விலங்குகளையும் பறவைகளையம் வேட்டையாடுதல், குழுவாக நடனமிடல் போன்ற காட்சிகளை ஆதிமனிதன் வரைந்து வடிவமைந்துள்ள பாங்கும் அதன் காட்சி அமைப்பும் பார்வையாளனுக்கு இரு பரிமான திரை நாடகத்தை பாறைப் பதிவில் காணும் வண்ணம் அமையைப்பெற்றதாகவே இருக்கும். இவ்வாறு ஆதிமனிதன் தன் எண்ண ஓட்டங்களையும் தன் அனுபவங்களையும் பாறை ஓவியமாக ஆங்கிலத்தில் Frame by frame என்ற அமைப்பில் ஆரம்பகால் நாடக பரிமாணத்தை வரைந்தான்.

**தமிழக சுவரோவியங்கள் காட்டும் நாடகப்பரிமாணம்**

ஓவியங்களையும், கீரல் சிற்பங்களையும் மலைகளிலும் குகைகளிலும் வடிவமைத்த மனிதன். நாகரீகமுற்று குழுவாக ஒன்று கூடி பின்பு சிறிய பெரிய கற்றளிகளை கட்டினான். அக்கற்றளிகளை அழகு செய்யும் பொருட்டும், முக்கிய நிகழ்வுகளை நடந்தவற்றை பிறருக்கு உணர்த்தும் பொருட்டு சுவரோவியமாக மேற்கூரைகளிலும், சுவர்களிலும் வரைந்தான். ஓவியம் போன்று சிற்பங்களாகவும் வடித்தான். அவ்வாறான ஆரம்பகால சுவரோவிய மரபு ஓவியங்களில் தமிழகப் பகுதியில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசலிலும், விழுப்புரம் மாவட்டத்தில் பனைமலைப்பேட்டையிலும் காணலாம். மனித இடர்பாடுகளாலும் காலமாற்றங்களாளும் பெரும் பகுதி சிதைந்து போன அவ்வோவியங்கள் அக்கால மனிதன் பிற உயிர்களிடத்தில் தான் கொண்டிருந்த அன்பினையும் அவற்றின் மேல் அவன் கொண்டிருந்த மதிப்பீட்டினையும் பறைசாற்றுவதாகவே உள்ளது. உதாரணமாக சித்தன்னவாசலில் காணப்படும். அர்த்தமண்டப ஓவியத்தில் உள்ள காட்சி அமைப்புகள் ஒரு மேடை நாடக காட்சியினை புலப்படுத்தும்.(3)

மனிதர்களோடு, பறவைகள், விலங்குகள், பூக்கள் இலைகள் என்று அக்கால மனிதன் தான் இயற்கையினை நேசித்த உணர்வுகளை கண்முன்னே காட்டும். பல்லவர்கலை பாணியில் வரையப்பட்ட பனைமலைப்பேட்டை ஓவியமும் சித்தன்னவாசல் ஓவியமும் இரு பரிமாண (Two dimension) ஒற்றை வண்ண பாறை ஓவியங்களிலிருந்து நகர்ந்து முப்பரிமாண (Three dimension) பல வண்ண ஓவிய பாணியின் மூலம் ஒரு காட்சியின் நிகழ்வுகளை கண்முன் நிறுத்துகின்றது. அவ்வாறான ஒவியங்களை ஒரு பார்வையாளனுக்கு பலவிதமான அனுபவப் பகிர்வுகளையும் மன ஓட்டங்களையும் அவனுள் ஒரு நாடக வடிவத்தில் நகரவிடும்.

சோழர்கள் காலத்தில் அச்சுவரோவிய பாணி புராண, காப்பிய, இதிகாச கதைக்கருவினைக் கொண்டு தீட்டப்பட்டன. இவற்றினை பல தமிழ் இலக்கியங்கள் வாயிலாகவும், பல தமிழக கோவில்களிலும் இன்றளவும் காணலாம். சிலப்பதிகாரத்தில் கலைகளைப்பற்றி மிகுதியாக காணமுடிகிறது. சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் ஒவு, ஓவம் என்ற பெயரில் ஓவியம் குறித்த சொல்லாடலை பார்க்கலாம். "ஓவுறத் நெடுஞ்சுவர்" என்ற இடத்து "ஓ" என்ற ஒரெழுத்து மொழியே ஓவியத்தை குறித்ததாக இருக்கின்றது. (4) ஓவியம், சிற்பம், நடனம், நாடகம் என்று அனைத்து கலைகளில் பிரதிபலப்பாகவே சிலப்பதிகாரம் உள்ளது. அனைத்து நுன்கலைகளும் நிகழ்கலைகளின் வடிவங்களும் சிலப்பதிகாரத்தில் ஒன்றோடு ஒன்று இழைந்தும் இடைந்தும் காணப்படுகிறது. நாடக, நடன மேடைகளின் அமைப்பும் அதன் சார்ந்த பக்க அமைப்புக்களும் இன்றுள்ள நவீன நாடகம் அரங்கில் பயன்படும் அனைத்து அமைப்புகளையும் கண்முன் நிறுத்தும்.

"ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்
காற்றுவரல் எதினியும் புரிந்துடன் வகுத்தாங்கு

ஓவிய விதானத்து" என்ற சிலப்பதிகார பாடலில் நாடக மேடையில் ஒரு முக எழினி, பொருமுக எழினி, கரந்து வரல் எழினி ஆகிய மூன்று வகைத் திரைச் சீலைகள் அமையுமென்றும் இவற்றில் ஓவிய விதானம் அமைக்கப் பெற்றிருக்குமென்றும் இளங்கோவடிகள் கூறுகிறார்[5].

சோழர் கால சுவரோவியங்கள் பெரும் பகுதியாக பெரிய புராண சமயக் குரவர்களின் வாழ்வியல் கதைகளை மேற்கொண்டு தீட்டப்பட்டுள்ளன. உதாரணமாக தஞ்சை பெரிய கோயில் கருவறையில் சோழர்கால சுவரோவியங்கள் பல தீட்டப்பட்டுள்ளன. அச்சுவரோவியங்கள் காட்டும் முகபாவனைகளும் உணர்ச்சிகளும் பலவிதமான உடல் சைகை அமைப்புகளும் ஒரு நாடக வடிவிலும் நாட்டிய அமைப்பிலும் அமைந்தவையாக தீட்டப்பட்டுள்ளன.[6]

தட்சிணாமூர்த்தி, திரிபுராந்தகர் மற்றும் இராஜஇராஜசோழன் தன் குடும்பத்துடன் நடராஜரை வழிபடுது இராஜராஜன் கருவூர் தேவருடன் உள்ள ஓவியங்கள் அனைத்தும் ஒரு நாடகப் பதிவினை தொடரோட்ட கதை பாணியில் நமமை அழைத்துச் செல்கின்றது.

கொரானா காலகட்டத்தில் தஞ்சை பெரிய கோயில் கருவறை சுவர்களில் கண்டுபிடிக்கப்பட்ட சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவரான சுந்தரரின் திருமண நிகழ்வினை குறிக்கும் ஒரு ஓவியம் காண்பவர் கண்களில் பலவிதமான பதிவுகளை ஏற்படுத்தும். ஒரு நாடக நிகழ்வினை தத்ரூபமாக எடுத்தியம்புவது போல் காட்சி கோர்வைகளால் அமைக்கப்பட்டிருக்கும். சிவன் முதியவர் வேடத்தில் வருவது, சுந்தரரின் திருமணத்திற்கு வந்தோரின் காட்சிப் பதிவு போன்ற நாடக அரங்க அமைப்புகளும், நாடகக் கதைமாந்தர் அமைப்புகளும் நம் கண்முன்னே பல வண்ண காட்சி சார் நாடக வடிவினை நம்முள் கடத்திச் செல்லும்.

**தமிழ்ச் சிற்பங்கள் காட்டும் நாடகப் பதிவுகள்**

தமிழகப் பாறை ஓவியங்கள் மற்றும் சுவரோவியங்கள் போன்று எண்ணற்ற காட்சி சார் நாடகப் பதிவு கொண்ட நிகழ்த்துக் கலை படைப்புகள் தமிழச் சிற்பங்களில் எண்ணற்றவை உள்ளன. சித்தன்னவாசல் குகை ஓவியம் போன்ற இயற்கையும் மனிதனும் சங்கமிக்கும் காட்சிப் பதிவுகள் போன்றதொரு பதிவுகள் மாமல்லபுரத்தில் உள்ள ஒரு புடைப்புச்சிற்பத்தில் காணமுடிகிறது. அர்ச்சுனனின் தவம் என்றழைக்கப்படும் இரு பெரும் திரட்சியான பாறை அமைப்பினைக் கொண்ட

ஒரு புடைப்புச் சிற்பம் பார்வையாளனின் மன ஓட்டத்தினை அதிலுள்ள உருவங்களைக் கொண்டும் காட்சிகளை கொண்டும் ஒரு நாடக அமைப்பாக நகரச் செய்யும். ஏறத்தாழ 40மீட்டர் நீளமும் 12 மீட்டர் உயரமும் உடையதாக பகீரத தபசு எனவும் அழைக்கப்படும் அப்பெரிய புடைப்புச் சிற்பத் தொகுதி மாமல்லபுரத்தில் தலசயனப் பெருமாள் கோயிலுக்கு பின்புறத்தில் அமைந்துள்ள பெரிய பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. மண்ணுலக உயிர்கள் முதல் விண்ணுலக உயிர்கள் வரை பல்லுயிர் கலைப் பேழையாகவே இச்சிற்பம் காணப்படுகிறது.[7]

ஒவ்வொரு உருவக் காட்சிப் பதிவுகள் ஒரு நாடகக் கதைப் பதிவுகளை கடத்திச் செல்கிறது. அதிலும் குரங்குகள், பூனைகள் மனிதர்களைப் போன்று செய்யும் சிலுமிஷ அபிநய முறைகள் ஒரு நாடகத்தில் நய்யாண்டியின் நகைச்சுவை நடப்புக் காட்சிகளை நம்முள் புகுத்திச் செல்கிறது. கோயில்களில் உள்ள சிற்பங்கள் நாடகக் காடசி அமைப்புக்களை கொண்டு படைக்கப்பட்டவையாகவு அமைக்கப் பெற்றிருக்கும். பொதுவாகக் கோயில்கள் மக்களை ஒருங்கிணைக்கும் ஓர் இடமாகவே அமைக்கப்பட்டிருக்கும். அரசன் முதல் ஆண்டி வரை அனைவரையும் ஒருங்கிணைத்து பல நிகழ்வுகளையும் உணர்வுகளையும் கட்டளைகளையும் பிரகடனப்படுத்தும் ஒரு இடமாகவே கோவில்கள் கட்டப்பட்டுள்ளன.

சமயங்களைப் பரப்புவதற்கும்அரசின் வீர தீர பெருமைகளைக் கூறவும் கடவுளின் சக்திகளையும் அவர்தம் திருவிளையாடல்களையும் கூறும் விதமாக எண்ணற்றச் சிற்பங்கள் நாடகக் காட்சிசார் அமைப்பில் படைக்கப்பட்டுவந்துள்ளது.[8]

கோயில்களில் நாடகக் காட்சிகள் சிற்பங்கள் புரான இதிகாச கதையாடல்களோடு உள்ளவற்றை பல இடங்களில் காணலாம். அதிலும் இராமாயணக் கதைக் காட்சிகள் கோயில் பிரகாரத்தைச் சுற்றி ஒரு தொடர் கோர்வைக் காட்சி அமைப்பில் வடிக்கப்பட்டிருப்பதை சிறிய வடிவிலான (Miniature) புடைப்புச் சிற்பத்தில் காணலாம். இராமன், லட்சுமணன், சீதை, வாலி, சுக்ரீவன், அனுமன் போன்ற இராமாயணக் கதை படைப்புக்கள் அக்கோயில்களின் சுவர்களின் ஊடே அக்கதைக் காட்சிகளை நாடக வடிவாக நம் மனதில் முன்னிறுத்திச் செல்கின்றன[9].

**முடிவுரை**

தமிழகக் கலை வரலாற்றில் நுண்கலைகளான சிற்பம், ஓவியம் போன்றவையும் நிகழ்த்துக்கலைகளான, இசை, நாடகம், நாட்டியம போன்ற கலை வடிவங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவையாக அமைக்கப்பட்டு வந்துள்ளன. ஆதி மனிதனின் பாறை ஓவியங்கள் முதல் நாகரிக மனிதனின் ஓவியக் கலைப் படைப்புகள் மற்றும் சிற்பங்கள் வரைமேற்குறித்த அனைத்துக் கலைவடிவங்களின் ஒருமுகத் தன்மையோடுகூடியதை பெருவாரியாகக் காணலாம். கட்டுரையில் கூறப்பட்ட ஓவியச் சிற்ப நாடக வடிவக் கலைச் சான்றுகள் ஆரம்பகால கலை பாணியினை கொண்டவையே. பின்னர் வந்த விஜயநகர கலை பாணியும், நாயக்கர் கலை பாணியும் மராட்டியக் கலைப் பாணியும் தமிழகத்தில் உள்ள கலை வடிவங்களில் சில மாற்றங்ளை உட்புகுத்தி ஆனால் நாடக வடிவமைப்பு முறை காட்சிப் பதிவுகளை மாற்றாமல் படைக்கப்பட்டன. அவை பெரும்பாலும் இராமாயண, மகாபாரத கதை பாடல்களோடே அக்காட்சிகள் பதிக்கப்பட்டன.

இவ்வாறு தமிழகக் கலை வரலாற்றில் காட்சி சார் நாடகப் பதிவுகளை சிற்பங்களும் ஓவியங்களும் அதன் தன்மையிலிருந்து பதிவு செய்து வந்துள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. கு.வெ.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் கலையும் கலைக் கோட்பாடும், ப.ix
2. பவுன்துரை, இரா. தமிழகப் பாறை ஓவியங்கள், பக்.67-101
3. இராசவேல்,சு., சித்தன்னவாசல், பக்.41-45
4. பதிற்றுப்பத்து, பா.68:17
5. சிலப்பதிகாரம், 3:111
6. இராசேந்திரன்,பொ., சாந்தலிங்கம்,சொ., கோயிற்கலை, பக்.96-97
7. பாலுசாமி,சா., மாமல்லபுரம், பக்.91-92
8. சேதுராமன்,கு., வேதாசலம்,வெ., இந்தியக் கலை வரலாற்றில் அறுவகைத் தெய்வ வழிபாடு, பக்.47-49
9. கோதண்டராமன், பி., இந்தியக் கலைகள், பக்.103-104